**அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம் - 2019**

---

## 1. அபிப்பிராயம்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் உள்ளடங்கிய என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர, செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் செயலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு மன்றம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வதளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவுத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு மன்றத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது ஆணைக்குழுவின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகார பலத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அண்மித்தல் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வதற்கு போதியளவு ‘‘முறையாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்று நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த காசுப் பாய்ச்சல் கூற்று இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இல் குறிப்பிடப்பட்ட நியதிகளுக்கு இணங்க தயாரிக்கப் படாமையால் மீளாய்வாண்டில் காணப்பட்ட காசு மற்றும் காசுக்கு சமமான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,744,780 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது | 2019 ஆம் ஆண்டிற்காக காசுப்பாய்ச்சல் கூற்று முன்னைய ஆண்டுகளில் தயாரிக்கப்பட்ட மாதிரியில் தயாரிக்கப் பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 2 இல் குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க சரியாக தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | காசுப்பாய்ச்சல் கூற்று பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க தயாரிக்கப்பட வேண்டும் |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சுபிரி வாசனா சம்பத லொத்தர் மூலம் கிடைக்க வேண்டிய பங்களிப்பு படிகள் மற்றும் கணக்காய்வுக் கட்டணங்கள் ஒதுக்கீடு முறையே ரூபா 270,000 வீதம் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்த மையால் மீளாய்வாண்டின் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ரூபா 270,000 வீதம் குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன. | சுபிரி வாசனா சம்பத லொத்தர் நிதியக் கணக்கு மற்றும் கிடைக்க வேண்டிய லொத்தர் நிதியக் கணக்கில் 2019 ஆம் ஆண்டிற்காக மீதிகள் பதிவு செய்யும் போது லொத்தர் நிதியக் கணக்கில் 2019 ஆம் ஆண்டிற்கு கிடைக்க வேண்டிய நிதிய அளவு மற்றும் நிதியக் கணக்கின் ஆரம்ப மீதி தாமதத்தினால் தவறாக குறிப்பிடப் பட்டிருந்தமை இதற்கான காரணமாகும். | கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 4,551,252 ஆன மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 5,404,477 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 853,225 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மன்றத்திற்கு ஆண்டிற்காக கிடைத்திருந்த அரசின் மானியம் ரூபா ரூபா 2,500,000 ஆலும் சுபிரி வாசனா சம்பத லொத்தர் மூலம் கிடைத்திருந்த பங்களிப்பு ரூபா 5,053,340 ஆலும் குறைவடைந்திருந்தன. எவ்வாறாயினும் இவ்வாண்டில் முதியோருக்கான செயலகத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த ரூபா 7,000,000 ஆன மானியம் காரணமாக வீழ்ச்சி ரூபா 853,225 வரை குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் வலது குறைந்த சமூகத்திற்கு தொழில் வழங்கும் நோக்கில் சம்பள சலுகையொன்று வழங்குவதற்கு 2019 பெப்ரவரி 22 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் இலங்கையின் சகல ஊனமுற்றோரின் தகைமைகளுக்கு பொருந்தும் வகையில் தொழில் வழங்கும் செயற்திட்டமொன்று திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 74,500,000 குறைநிரப்பு மதிப்பீடொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஊனமுற்றோரை சேவையில் ஈடுபடுத்தினால் ரூபா 15,000 இற்கு உட்பட்டு தொழிலாளரின் சம்பளத்தில் 50 சதவீத சம்பள சலுகையொன்று 24 மாதங்களுக்கு வழங்க முன்மொழியப்பட்டிருந்ததுடன் 25 மாவட்டங்களில் 4965 ஊனமுற்றோருக்காக இந் நிதி ஏற்பாட்டை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.<br>எவ்வாறாயினும் வலது குறைந்த நபர்களிடமிருந்து தரவு சேகரிக்கப்பட்டு இந்த சலுகையை வழங்குவதற்கு முடியாமையால் மேற்குறித்த நிதிஏற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | வலது குறைந்த சமூகத்திற்கு தொழில் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக இந்த அலுவலகத்திற்கு முன் தயார்படுத்தலொன்றோ அல்லது அறிவூட்டலொன்று இல்லாமல் 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 74.5 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இத்தொகை அமைச்சின் செலவினத் தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2019 ஆம் ஆண்டின் நிதி முன்னேற்றம் அடையப்படாவிடினும் ஆறு மாதங்களான குறுகிய காலத்திற்குள் அனைத்து கூட்டிணைப்பு செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டிலிருந்து இத்தரப்பினரை தொழிலில் ஈடுபடுத்துவதற்கு தேவையான பின்னணியொன்று தயாரிக்கப்படும். | ஊனமுற்றோரை தொழிலில் ஈடுபடுத்தும் செயற்பாடு தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | ஊனமுற்றவர்கள் தொடர்பாக தரவு முறைமையொன்றை தயாரிப்பதற்காக ரூபா 13,500,000 ஆன நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 25 மாவட்டங்களும் மேவுகை செய்யப்பட வேண்டிய போதும் பரீட்சார்த்த செயற்திட்ட மொன்றாக நாரம்மல பிரதேச பிரதேச செயலகத்திற்குரிய 03 கிராம சேவையாளர் பிரிவுகளில் மாத்திரம் செயற்திட்டம் | ஒவ்வொரு துறையும் மேவுகை செய்யப்படும் வகையில் பல துறைகளில் தரவுகளை சேகரிப்பதற்கு அதிகளவு காலம் தேவையாகும். அவ்வாறே Voice என்ற பெயருடைய அரச சார்பற்ற நிறுவனமொன்றின் தொழில்நுட்ப மற்றும் உழைப்பு பங்களிப்பின் பேரில் மேம்படுத்தப்பட்ட மென்பொருளொன்றைப் பயன்படுத்தி ஆண்டின் இறுதி | ஊனமுற்றவர்களுக்கு சலுகைகளை வழங்குவதற்கு அவர்களுக்காக தரவு முறையொன்றை விரைவில் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அமுல்படுத்தப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்திற்காக ரூபா 1,900,000 மாத்திரம் செலவிடப்பட்டமையால் ரூபா 11,600,000 சேமிக்கப்பட்டிருந்தது. | அளவில் குறித்த மென்பொருளை சீராக்கி நாரம்மல பிரதேச பிரதேச செயலகத்திற்குரிய 03 கிராம சேவையாளர் பிரிவுகளை மேவுகை செய்யும் வகையில் குறைந்த கிரயத்தில் மிகவும் சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்ளப்பட்டது. | |

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொழில்நுட்ப உத்தியோகத்தர், சைகை மொழிபெயர்ப்பாளர், கணக்காளர், பிரேலி மதியுரையாளர் பதவிகள் உள்ளடங்கிய 16 பதவிகளிற்காக 40 உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு 2018 மார்ச் 19 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 20 வரையிலும் அவ் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் சமூக வலுவூட்டல் அமைச்சிற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த 24 உத்தியோகத்தர்கள் மூலம் மன்றத்தின் தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | தொழில்நுட்ப உத்தியோகத்தருக்காக ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதனை அங்கீகரித்து ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | ஊனமுற்றவர்களிற்கு நிவாரணங்களை வழங்கும் போது அது தொடர்பாக செயற்படுகின்ற பதவியணியினரை தேசிய செயலகத்தின் இணைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஊனமுற்ற நபர்களிற்கு நுழைவு வசதிகள் வழங்கப்படுவது தொடர்பாக 2016 இன் 1 ஆம் இலக்க ஊனமுற்றவர்களிற்கான நுழைவுக் கட்டளையின் கீழ் சட்ட நடவடிக்கை எடுத்தல் மற்றும் நுழைவு வசதிகளை நிறைவேற்றுதல் தொடர்பான பின்தொடர் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் உட்பட அது தொடர்பான பொறுப்பு இம் மன்றத்தின் கீழ் கையளிக்கப்பட்டிருந்த போதும் அங்கீகரிக்கப்பட்ட | ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் நுழைவு வசதிகளை மேற்கொள்வ தற்காக நிதி அமைச்சுடன் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளதுடன் அதற்குரிய மதிப்பீடு மாவட்ட செயலாளர்கள் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | ஊனமுற்றவர்களிற்காக நுழைவு வசதிகளுடன் கூடுதலாக எதிர்காலத்தில் நிர்மாணங்கள் மேற்கொள்வதாக உறுதிப்படுத்துதல் சபையின் பொறுப்பாகும். |

| | | |
|---|---|---|
| பதவியணியினரில் உள்ளடங்குகின்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் இதுவரை ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருக்காததால் அத்தகைய தொழிற்பாடுகளை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாதிருந்தது. | | |

**5 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆண்டில் தேசிய சபையின் வேண்டுகோளின் பிரகாரம் முதியோருக்கான செயலகத்தினால் ரூபா 7 மில்லியன் ஊனமுற்றோருக்கு மூக்கு கண்ணாடிகளை வழங்குவதற்கு தேசிய செயலகத்திற்கு வழங்கியிருந்தது. அந்நன்கொடையை உள்ளடக்கி திருத்திய பாதீடொன்றை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய முதியோர் செயலகத்தின் மூலம் 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 7 மில்லியன் நன்கொடை கிடைத்திருந்தது. அத்தொகையில் ஒரு பகுதி உபகரணங்கள் கொள்வனவிற்காக 2020 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்டதால் அந்த பாதீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். | மன்றத்தின் நிதி மற்றும் செலவினம் மேற் கொள்வது தொடர்பாக பாதீடொன்று தயாரிக்கப்பட வேண்டியதுடன் அதற்காக முறையான திருத்தமொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |